நட்சத்திரன்

# காந்தி மகானுக்கு ஜே!



'அக்டோபர் 2' - இது மகாத்மா காந்தி பிறந்த தினம். அத்தினத்தில் அவரைப் பெருமைப்படுத்தும் விதமாக, அரும்பு இதழ் சார்பில் ஒரு கட்டுரை வரைய நினைத்தோம். அது எல்லோரும் சம்பிரதாயமாகச் செய்வதுதான். ஏதாவது புதுமை வேண்டும்... என்ன செய்வது? அந்த நேரத்தில் தான் நமக்கு அறிமுகமானார் எம்.எல்.ராஜேஷ். இவர் காந்தி பற்றிய புகைப்படங்கள், ரூபாய் நோட்டுகள், தபால்தலைகள் சேகரித்து வைத்திருப்பது மட்டுமல்லாமல், புதிய புதிய காந்தியத் தகவல்களோடு ஆச்சரியமூட்டினார். விடுவோமா நாம், விரைந்தோம் கும்மிடிப்பூண்டிக்கு. அவரோடு உரையாடிய பகுதிகள் இதோ அரும்பு வாசகர்களுக்காக...

**இந்த ஆர்வம் எப்படி வந்தது?**

நான் சின்ன வயசாக இருக்கும் போது, எங்கப் பக்கத்து வீட்டுப்பையன் பல ஸ்டாம்புகள நோட்டில் ஒட்டி எங்களுக்குக் காட்டுவான். அப்ப அவன் முகத்துல ஒரு பெருமை வழியும். எனக்கும் இதுமாதிரி செய்ய ஆசை. அப்புறம் கன்னாபின்னான்னு எதை எதையோ சேகரிச்சேன். வேலை கிடைத்து, சம்பாதிக்க ஆரம்பித்தவுடனே இதை முறையாக செய்ய ஆரம்பித்தேன்.

**சேகரிப்புகளில் என்னென்ன செய்கிறீர்கள்?**

நான் நிறைய செய்றேன் சார். தபால்தலை, ரூபாய் நோட்டுகள், பழங்கால நாணயங்கள், பழைய புகைப்படங்கள், பிரபலமானவர்களின் கையொப்பமுடன் கூடிய புகைப்படங்கள் என என் சேகரிப்பு பட்டியலின் நீளம் அதிகம்.

**காந்தி பற்றிய சேகரிப்புகளை எப்போதிருந்து தொடங்கினீர்கள்?**

ஒரு 5-6 வருடமாகத் தீவிரமான முறையில் சேகரித்து வருகிறேன். இதுவரை காந்தி ஸ்டாம்புக்காக மட்டும் ஆறு லட்சம் ரூபாய் வரையில் செலவு செய்து சேகரித்துள்ளேன்.

**காந்தி பற்றிய சேகரிப்புக்கு எது காரணமாக இருந்தது?**

நான் முதலில் இதைச் சிம்பிளாகச் செய்து கொண்டிருந்தேன். அப்ப மும்பையில் காந்தி பற்றி ஒரு கண்காட்சி நடந்தது. அதற்கு நான் போயிருந்தேன். அங்க வைத்திருந்த திங்க்ஸ பார்த்து அசந்திட்டேன். பிறகு நானும் முறையாகச் செய்ய ஆரம்பித்தேன்.

**காந்தி அடிகளுக்கு இதுவரை எத்தனை நாடுகள், எவ்வளவு ஸ்டாம்புகள் வெளியிட்டுள்ளன?**

100க்கும் மேற்பட்ட நாடுகள் அவருக்கு தபால்தலைவெளியிட்டு உள்ளன. குறிப்பாக இந்தியாவில் 46 ஸ்டாம்புகளும், அமெரிக்கா 21ம், ஆப்பிரிக்கா 31ம், ஐரோப்பிய நாடுகள் 25ம், ஆசிய அளவில் 28ம் என அவருக்குத் தபால் தலை வெளியிடப்பட்டுள்ளன. இப்படி வெளியிட்ட முதல் வெளிநாடு அமெரிக்கா. ஆனால் அமெரிக்க மண்ணில் காந்தி கால் பதிக்கவே இல்லை.

**இந்தியாவில் வேறு எந்த மாதிரி காந்திக்கு வெளியீடுகள் நடந்துள்ளன?**

நாணயம், ரூபாய் என பலப்பொருள்கள். காந்தி உருவம் பொறித்த நாணயம்-9, டோக்கன்-7, போஸ்டு கார்ட்- 12, இன்லேண்ட் கவர் 20, ஸ்பெஷல் கவர் 50க்கு மேல், டெலிபோன் கார்ட் 3, இது போல் நிறைய இருக்கிறது.

**சேகரிப்பில் ஏற்படும் இடர்பாடுகள், தடைகள்?**

முதல் பிரச்சினை பணம், அடுத்து குடும்பத்தைச் சரியாக கவனிக்க முடியாது. ஆபிஸில் கெட்ட பேர் நிச்சயம்.

**இந்தச் சேகரிப்பினால் வரும் பயன் என்ன?**

முதலில் எனக்கு மிகப்பெரிய சந்தோஷம். அடுத்தாக பிறருக்கும் அதைப் பகிர்தல். இது ஒரு சுகமான போதை போன்றது. ஆனால் இது கல்வி, வரலாறு, நம் பாரம்பரியம், பழமை, தகவல் அறிதல் என்ற விதத்தில் ஒரு அறிவு போதையும் கூட.

**காந்தி அடிகளுடைய ஏதாவது ஒரு ஸ்டாம்புக்காக அதிகம் மெனக்கெட்டதுண்டா?**

செந்தோம்னு ஒரு நாடு. அந்த நாடு காந்திக்கு ஒரு ஸ்டாம்பு போட்டு இருக்கு. அது எனக்குக் கிடைக்கவே இல்லை. பெரிய முயற்சி பண்ணி அதைத் சேகரித்தேன்.



காந்தி உருவ ஓவியத்துடன் எம்.எல்.ராஜேஷ்

**உங்களுக்கான அங்கீகாரிப்புகள்?**

நான் பெரிதாக வெளிப்படுத்தல. இருந்தாலும் இப்ப பல இடங்களில் பல்வேறு முறைகளில் எனக்குப் பாராட்டுகள் கிடைக்கின்றன. 'இந்து' பத்திரிக்கையில ஒரு பேட்டி. இப்ப கூட 'புதிய தலைமுறை' பேட்டி எடுத்தாங்க.

**இதன் மூலம் மாணவர்களுக்குச் சொல்ல விரும்புவது?**

இந்தியாவில் மருத்துவம், யோகா, தத்துவம் இப்படி எவ்வளவோ தோன்றியது. எல்லாத்தையும் நாம இழந்துட்டோம்; மறந்துட்டோம். இப்ப கொஞ்சம் காலத்திற்கு முன்னாடி உலகத்தின் உத்தமராக வாழ்ந்தவர் காந்தி. அவரையும் நாம் மறந்து வருகிறோம். இதற்குக் காரணம் இயந்திரமான வாழ்க்கை. சம்பளத்திற்கு ஒரு வேலை செய்தாலும், லைப்புக்கு என்று ஒரு ஹாபி இருக்க வேண்டும். அதுதான் மனிதனை வளர்த்தெடுக்கும்" என்று கூறும் ராஜேஷ்*க்குத் திருமணம் ஆகிவிட்டது. இரண்டு குழந்தைகளோடு தற்போது சென்னை கும்மிடிப் பூண்டியில் வசித்து வரும் இவர் பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார். ■




**அமெரிக்க நாடு வெளியிட்ட காந்தி தபால் தலை இது. முதன் முதலில் காந்தியடிகளுக்கு வெளிநாட்டளவில் வெளியிடப்பட்ட முதல் தபால் தலையாகும்.**



**இந்திய மாநிலச் செயலாளராக இருந்த லார்ட் பெதிக் லாரன்ஸ் உடன் காந்தியடிகள் நிற்கும் இந்தப் புகைப்படம் தான், ரூபாய் நோட்டில் உள்ள சிரித்த முகத்துடன் இருக்கும் படமாகும்.**

**எம். எல். ராஜேஷ் சேகரித்த காந்தியின் தபால் தலைகள்**



















